# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.04.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 21461/SCIC/2023

திரு ரா. சீனிவாசன் த/பெ.ராஜப்பன் மனுதாரர்
க.எண்.2/105 A, கங்கசந்திரம்
குருபரப்பள்ளி அஞ்சல்
கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம் .... பொது அதிகார அமைப்பு
கிருஷ்ணகிரி.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 21/09/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “ஜனவரி 1, 2023 முதல செப்டம்பர் 10, 2023 வரை நினைவூட்டு பதிவேடு மற்றும் காலமுறை அறிக்கை பதிவேடு, வருகை பதிவேடு, வருகை பதிவேட்டின் தொடர் குறிப்பு பதிவேடு, முகாம் பதிவேடு, பணி பதிவேடு கள ஆய்வு செய்து நகல் எடுக்க அனுமதி வழங்கவும் ” என்பன போன்று 7 (ஏழு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 31/10/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 19/12/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 21461/SCIC/2023 ஆக பதிவு செய்தது. பொதுத் தகவல் அலுவலர்/தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,

கிருஷ்ணகிரி அவர்கள் மனுதாரருக்கு ந.க.5508/2024/அ1, நாள் 07/11/2024 வாயிலாக மனுதாரருக்கு தகவல் அனுப்பியுள்ளதோடு, அதன் விவரத்தை 11/11/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக ஆணையத்திற்கும் தெரிவித்துள்ளார். அதன் பின்னர், மனுதாரர் 20/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை கடிதம் அனுப்பியுள்ளார்.

3. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின்மீது காணொளி காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 03/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய காணொளி காட்சி விசாரணைக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தின் முன் நேரடியாக ஆஜராகுமாறு பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**4. இன்றைய காணொளி காட்சி விசாரணையில் மனுதாரர் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து கலந்து கொண்டார். விசாரணைக்கு ஆணையத்தின் முன் பொது அதிகார அமைப்பின் சார்பில், திருமதி/செல்வி ச.வசந்தி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம் அவர்கள் ஆஜரானார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் 21/09/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கும், 31/10/2023 தேதியிட்ட பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவிற்கும் அப்போதைய (21/09/2023 தேதிய) பொதுத் தகவல் அலுவலர் திரு.பிரகாஷ் அவர்கள் (தற்போது) தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சூளகிரி வட்டம் மற்றும் அப்போதைய (31/10/2023 தேதிய) மேல்முறையீட்டு அலுவலர் திரு.என்.விஜயகுமார் அவர்கள் (தற்போது) தனி வட்டாட்சியர், குடிமைப் பொருள் வழங்கல் துறை (Civil Supply), கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர் எவ்வித தகவலையும் மனுதாரருக்கு வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது.**

**5. எனவே, மேற்குறிப்பிட்ட திரு.பிரகாஷ், முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மற்றும் திரு.என்.விஜயகுமார், முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர் ஆகியோர் மீது பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று, அதனை 29/05/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**6. மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம்-2005, பிரிவு 2(J)-ன் கீழ் பதிவேடுகளை ஆய்வு செய்யக் கோரியிருந்தமைக்கு, பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி வட்டம் அவர்கள் 07/11/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக, மனுதாரரை 26/11/2024 அன்று வரச் சொல்லி உள்ளார் எனத் தெரிய வருகிறது. அதற்கு மனுதாரர், மேற்குறிப்பிட்டவாறு 26/11/2024 அன்று வட்டாட்சியர் அலுவலகம் சென்றிருந்த போது அன்றைய தினம் வருவாய் துறை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்த காரணத்தினால், மனுதாரரால் பதிவேடுகளை ஆய்வு செய்ய இயலாமல் போய்விட்டது. அதன் பின்னர், எவ்வித தகவலோ, கடிதமோ மனுதாரருக்கு கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவித்தார். பொதுத் தகவல்**

**அலுவலரும் 26/11/2024 வேலை நிறுத்தத்திற்குப் பின்னர் எவ்வித கடிதமும் மனுதாரருக்கு அனுப்பப்படவில்லை என ஒத்துக் கொண்டார். பொது அதிகார அமைப்பின் செயல்பாடு முறையற்றது என ஆணையம் கருதுவதோடு, அதனை ஆணையம் ஏற்கவில்லை. மேலும், மனுதாரருக்கு 11/11/2024 தேதியிட்டுத்தான் மிகவும் காலதாமதமாக பதிவேடுகளை 26/11/2024 அன்று ஆய்வு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுவும் வேலை நிறுத்தம் செய்த காரணத்தினால் ஆவணங்களைப் பார்வையிட இயலவில்லை. அதன் பின்னர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது, மனுதாரர், தான் பிரிவு 6(1)-ன் கீழ் கோரியவாறு பதிவேடுகளை ஆய்வு செய்ய, தயாராக இல்லை என விசாரணையில் தெரிவித்தார்.**

**எனவே, பொது அதிகார அமைப்பு, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.25,000/- (ரூபாய் இருபத்து ஐயாயிரம் மட்டில்) ஐ வழங்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிப்பதோடு, அதன் பின்னர், தொகையைப் பெற்றுக் கொண்டதற்கான இரசீதின் நகலை பெற்று 29/05/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிப்பதோடு, மேற்குறிப்பிட்ட பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோரிடமிருந்து பெற்ற காரண விளக்கங்களையும் சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## <u>வழக்கு எண். SA 21461/SCIC/2023</u>

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
1.பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
கிருஷ்ணகிரி.

2.திரு.பிரகாஷ்
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
கிருஷ்ணகிரி மாவட்டம்
(தற்போது), சூளகிரி வட்டாட்சியர் அலுவலகம்

3.திரு.என்.விஜயகுமார்,
முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்/
வட்டாட்சியர்
(தற்போது) தனி வட்டாட்சியர்
குடிமைப் பொருள் வழங்கல் துறை
கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மனுதாரர்**
திரு ரா. சீனிவாசன் த/பெ.ராஜப்பன்
க.எண்.2/105 A, கங்கசந்திரம்
குருபரப்பள்ளி அஞ்சல்
கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம்

நகல்
1.மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
கிருஷ்ணகிரி மாவட்டம்.

2. பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035 (for follow up)

RG/PC